Valar_Nilai_10:Layout 1  31/03/2002  10:21  Page 1

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPEMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2008

# தமிழ்மொழி

## ஆண்டு 10

நேரம்: 180 நிமிடங்கள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தொகைநூலுக்குச் சரியான எடுத்துக்காட்டு

   அ) அகநானூறு ஆ) திருக்குறள் இ) பட்டினப்பாலை ஈ) நாலடியார்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. கழகக்கால ஆடவர் பெரும்பேறாகக் கருதியது

   அ) ஈதலை ஆ) காதலை இ) வீரச்சாவை ஈ) கல்வியை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. சார்பெழுத்துக்குப் பொருத்தமான எழுத்துக்கூட்டம்

   அ) க்ம்ல் ஆ) கமவ இ) அஆஇ ஈ) கஅன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை

   அ) 247 ஆ) 217 இ) 19 ஈ) 216

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. கம்பனின் மருதநில நாட்டிய அரங்கில் பார்வையாளராக அமைந்தவை

   அ) தாமரைகள் ஆ) வண்டுகள் இ) குவளைகள் ஈ) மயில்கள்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. கண்ணகிக்குச் சிலையெடுக்க இமயத்தில் எடுத்த கல்லைக் காவி வந்தவர்கள் யாவர்?

   அ) சேரசோழர் ஆ) கனகவிசயர் இ) பாண்டியர் ஈ) குறக்குடியினர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. 'பூவார்சோலை மயிலால புரிந்து குயில்கள் இசைபாட' காவேரி ஆறு பாய்கிறது. இக்காட்சி இடம்பெறும் இலக்கியம்

   அ) புறநானூறு ஆ) சிலப்பதிகாரம்
   இ) மணிமேகலை ஈ) தொல்காப்பியம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. ‘மண்ணிலே என்னைவிட்டு நீ மாவீரன் ஆனாயோ இவ்வாக்கியம்

அ) ஏவல் ஆ) வினா இ) வியங்கோள் ஈ) கூற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தேன்சிந்தும் காடுகளும்---------------------------வாவிகளும் நிறைந்தது மட்டக்களப்பு. கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) அலைபாயும் ஆ) நன்னீர் இ) வற்றாத ஈ) மீன்பாடும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கரணிய (காரண) இடுகுறிப்பெயருக்கான எடுத்துக்காட்டு

அ) ரோசாப்பூ ஆ) பேருந்து இ) மண்வெட்டி ஈ) மாமரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ‘இலெமூரியா’ எனப்படும் கடல்கொண்ட பழந்தமிழகத்தின் பெயர்

அ) பரதகண்டம் ஆ) நாவலந்தீவு இ) குமரிக்கண்டம் ஈ) கன்னியாகுமரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. அச்சமின்றி ஆடிப்பாடி வாழ்வதற்கு வேண்டியது என்ன?

அ) அரங்கு ஆ) விடுதலை இ) காசுபணம் ஈ) அஞ்சாமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. சாவுக்கஞ்சாது மாந்தர் செய்யவேண்டிய முதற்கடமை என்ன?

அ) நாட்டைக்காப்பது ஆ) வீட்டைக்காப்பது
இ) பணத்தைக்காப்பது ஈ) உயிரைக்காப்பது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. ஓர் இனக்குழு வாழையடி வாழையாகத் தான் வாழ்ந்த மண்ணைவிட்டு வேறோர் ஆள்புலத்திற்குக் குடிபெயர்வது

அ) இடமாற்றம் ஆ) குடியேற்றம் இ) நாடுபிடித்தல் ஈ) புலப்பெயர்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. தன் நிலையில் தாழாதிருப்பதும் தாழ்வு வந்தால் உயிர் வாழாது சாவதும் எப்பண்பு?

அ) வீரம் ஆ) மானம் இ) மடமை ஈ) அச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. இறந்தகால இடைநிலைகளைச் சரியாகக் கொண்டுள்ள எழுத்துக்கூட்டம்

அ) த் ட் ற் இன் ன் ஆ) த் ட் ற் ந் ன்
இ) த் ட் ற் இன் அன் ஈ) த் ட் ற் ன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்த தமிழர் தலைவரின் பெயர்

அ) G.G. பொன்னம்பலம் ஆ) S.J.V. செல்வநாயகம்
இ) M.G. இராமச்சந்திரன் ஈ) A. அமிர்தலிங்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. இலங்கைத்தீவில் முதன்முதல் கால்வைத்த ஐரோப்பியர்

அ) ஆங்கிலேயர் ஆ) பிரான்சியர் இ) ஒல்லாந்தர் ஈ) போர்த்துக்கேயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. 'நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று வாதிட்ட கழகப் புலவன்

அ) நக்கீரன் ஆ) தருமி இ) வள்ளுவன் ஈ) தொல்காப்பியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. வினைத்தொகைக்குச் சரியான எடுத்துக்காட்டு

அ) கவரிமா ஆ) செங்கதிர் இ) ஓடுநீர் ஈ) முன்னிரவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கு எடுத்துக்காட்டு

அ) காட்டுயானை ஆ) நாகப்பாம்பு இ) பாம்புபாம்பு ஈ) மரஞ்செடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. 'வெள்ளம் வருமுன் அணைகோல (அணைகட்ட) வேண்டும்'
இப்பழமொழியின் அறிவுரை

அ) வெள்ளத்தைத் தடு ஆ) பின் நேரமிராது
இ) முன்னேற்பாடு ஈ) ஓடவிடக்கூடாது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. உருவகஅணி ஏற்றுள்ள சொற்றொடர்

அ) பொற்றொடி ஆ) முகமதி இ) மதிமுகம் ஈ) வெண்ணிலா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. உலகின் அனைத்துச் சமயங்களுக்கும் இலக்கியம் கண்ட மொழி

அ) ஆங்கிலம் ஆ) இலத்தீன் இ) வடமொழி ஈ) தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழே உலக முதன்மொழி, குமரியில் தோன்றியது என்பதைச் சான்று காட்டி நிறுவியவர்

அ) ஞானப்பிரகாச அடிகள் ஆ) விபுலாநந்த அடிகள்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) தனிநாயகம் அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகளில் ஒன்று

அ) கங்கை ஆ) பஃறுளி இ) காவேரி ஈ) மகாவலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. கோழி பிடிக்க நரியார் வருகிறார் - இதில் இடம்பெற்றுள்ள வழு

அ) திணைவழு ஆ) பால்வழு இ) காலவழு ஈ) இடவழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. 'வானளாவிய மாடகூடம் நிறைந்த நகரம்' இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள அணி

அ) உருவகம் ஆ) தற்குறிப்பேற்றம் இ) உயர்வுநவிற்சி ஈ) உவமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதினார். இதில் வரும் வினைச்சொல்லின் செயற்பாட்டுவினை வடிவம்

அ) எழுதுவித்தது ஆ) எழுதப்பட்டது இ) எழுதியது ஈ) எழுதுவது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' - இப்பொன்மொழியைச் சொன்னவர்

அ) தனிநாயகம் அடிகளார் ஆ) தாகூர் இ) திருமூலர் ஈ) பாவாணர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 15)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை தருக.

# தண்ணீருக்கான போர்

வரலாறு முழுவதும் மாந்தன் போர் புரிந்து கொண்டிருக்கிறான். வலியவன் வலிமையற்றவனை அடக்கித் தான் வாழ முயல்கிறான். இவ்வியல்பு விலங்குகளிடம் இல்லை. முந்தைய காலங்களில் பிறநாடுகளின் நிலங்களைக் கைப்பற்றுவதற்குப் போர்கள் நடந்தன. வலிய நாடுகள் வளம் மிகுந்த வலிவற்ற நாடுகளைப் போரிட்டுத் தம் கீழ் அடிமைப்படுத்தினர். பின்னாளில் கைத்தொழிற்புரட்சியின் பயனாக இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இயந்திரங்களை இயக்குவதற்கு எரிசக்திக்கான கனிமவளம் (energy) தேவைப்பட்டது. எனவே, கனிமவளம் உள்ள நாடுகளை வல்லரசுகள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பின. கனிமவளம் உள்ள நாடுகளை ஒப்பந்தங்கள் மூலம் தம்முடன் அணிசேர்த்துக் கொண்டன. அணிசேர மறுக்கும் நாடுகளைப் போரிட்டுத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தன. அமெரிக்க - ஈராக் போர் இதற்கோர் எடுத்துக்காட்டு. இது கனிமவளத்துக்கான போர். தமது மேலாண்மை கரணியமாக இந்தப் போர்களை அந்த நாடுகள் நியாயப்படுத்தியும் வருகின்றன. இனி வருங்காலங்களில் இப்போர்முறை உலக ஒழுங்கு தண்ணீருக்காக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகிலுள்ள நீரில் 0.01 விழுக்காடு (வீதம்-%) நீரே உயிர்களின் குடிநீராக உள்ளது. அதுவும் தற்போது குறைந்தும் மாசுபட்டும் வருகிறது. இது உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். உலக வெப்பநிலை உயர்வு கரணியமாக துருவப் பனிப்பாறைகள் வேகமாக உருகி, துருவ நன்னீரின் வளமும் குறைவடைகிறது. இதற்கொரு சான்று, இவ்வாண்டு ஐரோப்பாவில் பூம்பனி விழாததால் ஐரோப்பிய நீர்வளம் பாதிக்கப்பட்டிருப்பதாகும். உலகம் இயந்திர மயமாக்கப்பட்டிருப்பதால், அவற்றின் கழிவுகள் நீரை மாசுபடுத்துகின்றன. இவற்றால், உயிரினங்களுக்குத் தேவையான நீருக்குத் தட்டுப்பாடு ஏற்படவுள்ளது. எனவே, எதிர்காலத்தில் நீர்வளம் மிக்க நாடுகளைத் தம்வயப்படுத்த வல்லரசுகள் போரைத் தொடுக்கலாம். இதற்கோர் எடுத்துக்காட்டு பல நாடுகளின் கண்டனத்துக்கும் எதிர்ப்புக்கும் இடையில், உருசிய நாடு வடதுருவப் பனிமலைகள் தனக்குத்தான் என்று உரிமை கொண்டாடுவதாகும்.

1. எதிர்காலப் போர்கள் எதற்காக நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

________________________________________

________________________________________

2. வல்லரசு நாடுகளின் கனிமவளப் போருக்கான ஓர் எடுத்துக்காட்டு.

3. குடிநீர் வளம் எதனால் குறைந்து வருகிறது?

4. முன்னாளில் போர்கள் எதற்காக நடைபெற்றன?

5. வல்லரசுகள் எதை உலக ஒழுங்காக ஆக்கி வருகின்றன?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் எவையேனும் ஐந்திற்கு முழுவிடை தருக.

1. குறிஞ்சி நிலத்துக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மூன்றையும் தருக.

2. ‘இயற்கை இன்பம்’ பாடத்தில் நீர் கண்ட காலைக்காட்சியைச் சுருக்கமாகத் தருக.

3. தமிழுக்காக, தென்றல் தவழ்ந்திடும் தமிழீழ மண்ணில் என்னவெல்லாம் செய்யக் கவிஞர் துடிக்கிறார்?

4. சேரன் செங்குட்டுவன் இமயத்தில் எடுத்த கல்லை எவ்வாறு தமிழகம் கொண்டு வந்தான்?

5. ஆழ்ந்துபோன குமரிக்கண்டத்திற்கு உரிய சிறப்பிரண்டை விரித்துக் கூறுக.

6. சிந்துநதி நாகரிகம் எங்கிருந்தது? அது எவ்வாறு தோன்றிற்று?

7. தேவநேயப்பாவாணரது ஆய்வுகளால் உலகிற்கு உணர்த்தப்பட்டவை யாவை?

(புள்ளிகள் 10)

**4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

## தமிழ்ப்பேறு

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியம் தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடும் மயில்நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்.
சோலைக் குளிர்தரும் தென்றல் வரும் பசுந்
தோகைமயில் வரும் அன்னம் வரும்
வேலைச் சுமந்திடும் வீரரின்தோள் உயர்
வெற்பென்று சொல்லி வரைக எனும்.

(வெற்பு - மலை)

1. கவிஞர் என்ன செய்ய முனைகிறார்?

______________________________

______________________________

2. 'தங்களின் ஓவியத்தைத் தீட்டுங்கள்' என்று சொன்னவை யாவை?

______________________________

______________________________

3. தென்றல் எதனைத் தருகிறது?

______________________________

______________________________

4. ஆடும் மயில் நிகர்த்தவர் யாவர்?

5. வேலைச் சுமக்கும் வீரரின் தோள் எதற்கு உவமை கூறப்பட்டுள்ளது?

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண வினாக்கள் ஏழினுள் எவையேனும் ஐந்திற்கு முழுவிடை தருக.

1. வினா எழுத்துக்களைத் தந்து, அவை வினாச்சொற்களில் அமையும் இடத்தையும் தருக.

2. அணிகள் நான்கினையும் தந்து, ஒன்றை விளக்குக.

3. உம்மைத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

4. சொற்புணர்ச்சி வகைகளைத் தந்து, ஒன்றை விளக்குக.

5. பெயரெச்சம், வினையெச்சம் இரண்டையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

6. செயப்படுபொருள் குன்றிய வினைச்சொல் பற்றி விளக்குக.

7. காரண இடுகுறிப் பெயர் - விளக்குக.

(புள்ளிகள் 15)

## 6) மொழியியல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு முழுவிடை தருக.

1. வாக்கியம் என்றால் என்ன?

2. கருத்து வெளிப்பாட்டின் அடிப்படையில் வாக்கிய வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக.

3. பின்வரும் வேற்றுமொழிச் சொற்களுக்கு தமிழ்ச்சொற்கள் தருக.

அகதி ______

அஞ்சலி ______

இராணுவம் ______

பத்திரிகை ______

கர்ச்சனை ______

4. வேற்றுமைத்தொகை, வினைத்தொகை இரண்டையும் விளக்குக.

______

______

5. சொல்வழக்கு - இயல்புவழக்கு, தகுதிவழக்கு என இருவகைப்படும். இயல்பு வழக்கை விளக்குக.

______

______

6. பொதுமொழிக்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக

______

______

7. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் விளக்குக.

______

______

(புள்ளிகள் 10)

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றுக்கு அல்லது படத்திற்கு 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.**

- **மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்.**

- **'இது விதியல்ல' (கதை பற்றிய விமர்சனம்)**
  - கதையின் உள்ளடக்கம்
  - கதைமாந்தரின் குணநலன்கள் - குமூகச் சீரழிவுக்கான கரணியங்கள்.
  - கதையின் நிகழ்கால வாழ்க்கைமுறைகள்
  - மொழிநடையின் சுவை கருத்தாழம் இயல்பு பற்றிய உமது சுவைப்பு

- **இணைக்கப்பட்டுள்ள படத்தை வைத்து வளர்ச்சியடையா நாடுகளும் வாழ்க்கையும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.**
  - பொருளியல் அடிப்படையில் நாடுகளின் தரப்பிரிப்புகள்
  - வளர்ச்சியடையா நாடுகள் - மூன்றாம் உலகநாடுகள்
  - மக்கள் வாழ்க்கைத்தரம் - பெரும்பான்மை ஏழ்மைநிலை
  - இளந்தலைமுறை - சத்துணவின்மை, அடிப்படைக் கல்வியின்மை, வளர்ச்சிகுன்றல்
  - படத்தின்படி மக்களின் தொழில் நிலைமை விளக்கம் - இன்மையிலும் மகிழ்வு
  - ஏழ்மைக்கான கரணியம் - உள்ளூர் அரசியல் சுரண்டல் - வல்லரசுகளின் மேலாண்மைச் சுரண்டல் மக்கள் விழிப்புணர்வின்மை
  - இது பற்றி உமது கருத்துடன் முடிக்கவும்

(புள்ளிகள் 20)

____________________

(புள்ளிகள் 20)